இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

கலைஞர் 100 1924 - 2024

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 59 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 22 – செவ்வாய்க்கிழமை 08 அக்டோபர் 2024 – கோவை ★★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 59 : Thiruvalluvar Year - 2055 - Purataasi 22 - Tuesday 08 October 2024 - Kovai ★★ 12 Pages ₹ 5.00




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்திய விமானப் படை தினத்தை முன்னிட்டு, சென்னை மெரினா கடற்கரையில் நேற்று முன்தினம் (6.10.2024) நடைபெற்ற இந்திய விமானப் படையின் பிரம்மாண்ட வான்வெளி சாகச நிகழ்ச்சியை பார்வையிட்டார். உடன் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், திருமதி. துர்கா ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், விமானப் படைத் தலைமைத் தளபதி மார்ஷல். ஏ.பி.சிங், விமானப் படை பயிற்சிப் பிரிவு தளபதி மார்ஷல். நாகேஷ் கபூர், விமானப் படை தின அணிவகுப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் மார்ஷல். கே.பிரேம் குமார், தாம்பரம் விமானப் படைத் தளபதி ரதீஷ் குமார் ஆகியோர் உள்ளனர்.

# கலைஞர் நூற்றாண்டு பூங்கா !

## சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார் !

**சென்னை, அக்.8-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை கதீட்ரல் சாலையில் கண்ணாடி மாளிகை, அயல்நாட்டுப் பறவையகம், பசுமை குகை, மர வீடு, அருவி, இசை நீரூற்று, குழந்தைகள் விளையாடும் இடம், பாரம்பரிய காய்கறித்தோட்டம், சிற்றுண்டியகம் முதலான சிறப்பு அம்சங்களுடன் கலைஞர் நூற்றாண்டு பூங்கா ! நேற்று (7.10.2024) திறந்து வைத்தார்!**

தமிழ் இலக்கியம், கலை, கலாச்சாரம் என்று தமிழ் வளர்ச்சிக்கும், அடித்தட்டு மக்களின் எழுச்சிக்கும் ஒரு நூற்றாண்டு காலம் வாழ்ந்து தமிழர்தம் வாழ்வில் நீங்கா இடம் பெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நினைவைப் போற்றுவதற்காக அவர்தம் பெயரில் சென்னை, கோபாலபுரம், கதீட்ரல் சாலையில் செம்மொழிப் பூங்காவிற்கு எதிரில் கலைஞர் நூற்றாண்டு பூங்கா வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில் தோட்டக் கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையினால் அமைக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.8.2023 அன்று சுதந்திர தினவிழா உரையில் “சென்னை கதீட்ரல் சாலையில் செங்காந்தள் பூங்காவிற்கு அருகில் உள்ள 6.09 ஏக்கர் நிலத்தில் 25 கோடி ரூபாய் செலவில் கலைஞர் நூற்றாண்டு பூங்கா ஒன்று அமைக்கப்படும்” என்னும் அறிவிப்பை வெளியிட்டார்கள்.



இப்பூங்கா அமைந்துள்ள இடம் முன்னர் ஒரு சங்கத்தின் கட்டுப்பாட்டில் தனியாரிடமிருந்தது. இதனைத் தொடர்ந்து, நீண்ட சட்டப் போராட்டத்திற்குப் பிறகு அரசால் மீட்கப்பட்டு தோட்டக்கலைத்துறைக்கு மாற்றம் செய்யப் பட்டது. அந்த நிலத்தில் சென்னை மாநகர மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் உலகத்தரம் வாய்ந்த பூங்காவினை அமைக்க முதலமைச்சர் அவர்களால் 27.02.2024 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

இப்பூங்காவில், பரந்து விரிந்த பசுமைச் சூழலில் பொழுதுபோக்கு அம்சங்களுடன் பல்வேறு வகையான அழகிய, அரியவகை தாவரங்கள் மற்றும் மரங்களைக் கொண்டதாக அமைய திட்டமிடப்பட்டு, அதற்கு செயல் வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது.

இயற்கை எழில்மிகு சூழலுடன் கூடிய இப்பூங்காவின் நுழைவாயில் அருகில் அமைந்துள்ள உயர்தர தோட்டக்கலை அருங்காட்சியகம், 500 மீட்டர் நீளமுடைய ஜிப்லைன், பார்வையாளர்களை படம்பிடிக்கும் கலைஞர்களின் கலைக்கூடம், தொடர் கொடி வளைவுப்பாதை, 120 அடி நீளமுடைய பனி மூட்டப்பாதை, 2600 சதுர அடியில் அமைக்கப்பட்டுள்ள ஆர்க்கிட் குடில், அரிய வகை கண்கவர் பூச்செடிகளால் காட்சிப் படுத்த 16 மீட்டர் உயரமுடைய 10,000 சதுர அடிப் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள கண்ணாடி



மாளிகை, அயல்நாட்டு பறவைகளைக் கொண்ட பறவையகம், 23 அலங்கார வளைவு பசுமை குகை, சூரியகாந்தி கூழாங்கல் பாதை, மர வீடு, அருவி, இசை நீரூற்று, குழந்தைகள் விளையாடும் இடம், பசுமை நிழற்கூடாரம், பாரம்பரிய காய்கறித் தோட்டம் மற்றும் சிற்றுண்டியகம் ஆகிய சிறப்பு அம்சங்களுடன் இப்பூங்கா 45 கோடியே 99 இலட்சம் ரூபாய் மதிப்பில், அமைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

# இந்திய விமானப்படை சாகச நிகழ்வுகள் !

## முதலமைச்சரும் – அமைச்சர்களும் கண்டு களித்தனர் !

**சென்னை, அக்.8-**

**சென்னை விமானப் படையின் பிரமாண்ட வான சாகச நிகழ்ச்சியை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டு களித்தார். மேலும் இந்த சாகச நிகழ்ச்சியை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் மற்றும் திருமதி துர்கா ஸ்டாலின், விமானப் படை அதிகாரிகள் பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் கண்டுகளித்தனர்.**

இந்திய விமானப்படை கடந்த 1932ஆம் ஆண்டு அக்டோபர் 8 ஆம் தேதியன்று தொடங்கப்பட்டது. தற்போது 93 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளதை கொண்டாடும் வகையில், சென்னையில் மிகப் பெரிய அளவிலான பிரம்மாண்டமான, விமான வான் சாகச நிகழ்ச்சிக்கு விமானப்படை ஏற்பாடு செய்திருந்தது.

அதன்படி, பாராசூட் சாகசத்துடன் வான் சாகச நிகழ்ச்சி தொடங்கியது. பயிற்சி பெற்ற ஆகாஷ் கங்கா வீரர்கள், வானில் 2 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து குதித்து பார்வையாளர்களை உற்சாகப்படுத்தினர். பயிற்சி பெற்ற கமாண்டோ படை வீரர்கள், பணையக் கைதிகளை ஹெலிகாப்டரில் இருந்து கயிறு மூலம் இறங்கி வீரர்கள் மீட்பது போன்று சாசகம் பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைத்தது.

வேற்றுமையில் ஒற்றுமையை பிரதிபலிக்கும் வகையில் 30க்கும் மேற்பட்ட ஆகாஷ் கங்கா வீரர்கள், பாராசூட் மூலம் வானில் சாகசத்தில் ஈடுபட்டனர். MI17 ரக ஹெலிகாப்டர்கள் மெரினா கடற்கரையை வட்டமடித்தப்படி வலம் வர, பார்வையாளர்கள் ஆரவாரம் எழுப்பி உற்சாகம் அடைந்தனர்.

பிரெஞ்சு விமான நிறுவனத்தின் தயாரிப்பான சேத்தக் ஹெலிகாப்டர்கள் வானில் பறந்து பல்வேறு சாகசங்களில் ஈடுபட்டன. மேலும், இந்திய விமானப்படையின் பழமையான டகோடா விமானங்கள் சாசகத்தில் ஈடுபட்டன. பயிற்சி விமானமான ஹார்வர்ட் தலைகீழாக பறந்து மெரினாவில் சாகசத்தில் ஈடுபட்டது காண் போரை வியப்பில் ஆழ்த்தியது.

விரைவில் இந்திய விமானப் படையில் சேர்க்கப்பட உள்ள HTT40 ரக விமானங்களும் சாகசம் புரிந்தன. 2 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் செல்லக்கூடிய C295 ரக விமானம் மெரினா வான் பரப்பில் சாகசத்தில் ஈடுபட்டது மெய்சிலிர்க்கும் வகையில் இருந்தது.

தஞ்சையிலிருந்து புறப்பட்டு மெரினா கடற்கரைக்கு வெறும் 20 நிமிடங்களில் இடி, முழக்கத்துடன் பறந்து வந்த ரஃபேல் போர் விமானங்களை பார்த்து, கடற்கரையில் குழுமியிருந்த பல லட்சக்கணக்கான மக்கள் ஆரவாரம் செய்து உற்சாகம் அடைந்தனர். வானில் பறந்த படியே, ரஃபேல் போர் விமானங்கள் எரி பொருள் நிரப்பியதை மக்கள் கண்டு களித்தனர்.

சிறிய இலகுரக சூப்பர் சானிக் விமானமான தேஜஸ் விமானங்கள் வானை வட்டமடித்து சாகசம் செய்தன. காண்போரை வியப்புக்குள்ளாக்கும் ஆகாஷ் கங்கா அணி, ஸ்கை டைவிங் விமானங்கள் ஒன்றுடன் ஒன்று மிக நெருக்கமாக வந்து சாகசங்களில் ஈடுபட்டன. காண்போரை கவர்ந்திழுக்கும் வகையில், ஏரோபாட்டிக் விமானம், வானில் லாகவமாக வந்து குட்டிக்கரணங்கள் அடித்தன.

கார்கில் போரில் பங்கேற்ற நவீன வசதிகள் கொண்ட ஜாகுவார் விமானங்கள் விண்ணில் வலம் வந்து ஆச்சர்யத்தில் ஆழ்த்தின. இதே போன்று, தேஜஸ் ரக விமானங்கள் வானில் அசத்திய சாகசங்கள் மெரினா கடற்கரையை அதிரவைத்தன.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்